1974 சனவரி 19]

திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன் : இதற்குக் காலவரையறை ஏதாவது உண்டா? எதுவரையில் வசூலிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தக் கட்டணம் நிகரச் செலவிலே மூன்றிலே ஒரு பங்கு ஆகும். அந்தக் கணக்குப்படி முழுத் தொகையும் வசூலிக்கப்படுகின்றவரையில் வசூலிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அணை கட்டுவதற்கு ஆகின்ற செலவு முழுமையும் வசூலித்தபிறகும்கூட வசூலிக்கிறார்களே, செலவு முழுவதும் வசூலித்துவிட்டால் பிறகு வசூலிக்காமல் நிறுத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1965 நவம்பர் திங்களில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டுக் கட்டணத்தை நிர்ணயிப்பது தொடர்பான பணி, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்கள் அனைத்திலும் முடிக்கப்பட்டுள்ளது. வசூலாகாமல் இருக்கின்றது. எனக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற தகவல்படி பல இடங்களிலே வசூலாகவில்லை. அதனால்தான் தொடர்ந்து வசூலிக்கப்படுகிறது என்று அறிகிறேன்.

வாணுபுரம் தொகுதி கிராமங்களை மாற்றியமைத்தல்.

*18 வினு—**திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், வாணுபுரம் கிராம அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளை பேராயம்பட்டு, குங்குலியநத்தம் பகுதிகள் ஒரு பிரிவாகவும், பெருந்துறைப்பட்டு, எடக்கல் பகுதிகளை ஒரு பிரிவாகவும் பிரிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) தீர்வை வீதங்கள் உயர்த்தப்பட்டதாலும், மேம்பாட்டு வரிகள் விதிக்கப்பட்டதாலும், சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்ட ஆயக்கட்டுப் பகுதிகளில் கிராம அதிகாரிகளின் பணிச்சுமை அதிகரித்துள்ளதால் வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டம், வாணு

புரம் தொகுதிக் கிராமங்களை மாற்றித் தொகுப்பதற்கான செயற் குறிப்பை, வட ஆர்க்காடு மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி பணிந்தனுப்பியுள்ளார். மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியின் செயற்குறிப்பை வருவாய்த் துறை (நிலவரி) வாரியம் பரிவுரை செய்தது. வருவாய்த் துறையின் 8—8—1973 நாளிட்ட 4722-ஆம் எண் அரசாணையில் அச் செயற்குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கிராமங்களை மாற்றித் தொகுத்ததன் விவரங்கள் வருமாறு :—

செங்கம் வட்டம் தற்போதுள்ள தொகுதி.	வருவாய்த்துறையின் 8—8—1973 நாளிட்ட 4722-ஆம் எண் அரசாணையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகுதி.
வாணுபுரம் (தொகுதி)	1. வாணுபுரம் (தனித்தொகுதி).
குங்குலியநத்தம்	2. குங்குலியநத்தம் (தொகுதி).
எடக்கல்	மழுவம்பட்டு.
	பேராயம்பட்டு.
பெருந்துறைப்பட்டு	
பேராயம்பட்டு.	3. எடக்கல் (தொகுதி).
மழுவம்பட்டு	பெருந்துறைப்பட்டு.

Agricultural Consultancy Service

* 19 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to set up an Agricultural Consultancy Service for the benefit of farmers in this State?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : விவர அறிக்கை@ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், ஏற்கெனவே கோயம்புத்தூர், மதுரை போன்ற இடங்களில் ஒவ்வொரு துறையிலும் நிபுணர்கள் இருக்கிருர்கள். அவர்களை வைத்து இந்த கவுன்சில் ஏற்பட்டிருக்கிறதா? அனுபவம் உள்ளவர்கள் இதில் கொண்டு வரப்பட்டிருக்கிருர்களா ?

@ 188-189 -ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.